**Illustration:1**

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THENI.**

**Case No: SC 12/2020**

**Prosecution Witness 4 (LW 7)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. பாண்டி | ஜாதி | : | -- |
| அப்பா பெயர் | : | கருப்பையா | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | -- |
| தாலுகா /மாவட்டம் | : | | வயது | : | /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.09.2024.

( எதிரிகள் ஆஜர்)

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அடையாளம் காணப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

முதல் விசாரணை:

1) நான் தற்சமயம் ஆண்டிபட்டி , கொண்டமநாயக்கன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 04.03.2019 ந் தேதி காலை சுமார் 07.00 மணியளவில் என்னுடைய வீட்டில் இருந்த என்னுடைய வெர்க்சாப்பிற்கு நானும்,. என்னுடன் வேலை பார்க்கும் கண்ணன் என்பவரும் என்னுடைய இரு சக்கர வாகனத்தில் மதுரை , தேனி மெயின் ரோட்டில் கிழக்கில் இருந்து மேற்கு புறமாக சென்று கொண்டு இருந்தோம். அப்போது Golden hardwares முன்னால் என்னை தாண்டி ஒரு அரசு பேருந்து மேற்கு புறமாக சென்றது.

2) அப்போது டம் என்று சத்தம் கேட்டது. நடுரோட்டில் பஸ் நின்று கொண்டு இருந்தது. நான் இரு சக்கர வாகனத்தை விட்டு இறங்கி சென்று பார்த்த போது ஒரு ஆட்டோவும் , ஒரு பேருந்தும் மோதி விட்டது. அதில் 4 பேர்கள் சம்பவ இடத்தில் இறந்து விட்டார்கள். ஒருவருக்கு மட்டும் உயிர் இருந்தது. சம்பவ

இடத்தில் இருந்தவர்கள் ஆம்புலன்ஸ் எண் 108 ற்கு போன் செய்தார்கள். காயம்பட்டவர் மற்றும் இறந்தவர்களை தேனி க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். சம்பவ இடத்தில் நாங்கள் அதிக நேரம் இருந்தோம். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1 வது எ.த.கு.வி:**

| | |
|---|---|
| கேள்வி | நீங்கள் எத்தனை வருடமாக ஓர்க்சாப் வைத்துள்ளீர்கள் என்றால்? |
| பதில் | 21 வருடமாக. |
| கேள்வி | உங்கள் கடையில் வேலை பார்த்த கண்ணன் என்பவர் முருகன் என்பவரின் மகன் என்றால் ? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் இரு வழி சாலை என்றால் ? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் எஸ் வளைவு பாதை என்றால் ? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | நீங்கள் டம் என்ற சத்தம் கேட்டு தான் சம்பவத்தை பார்த்தீர்கள் என்றால் ? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | சம்பவத்தை நீங்கள் நேரடியாக பார்க்கவில்லை என்றால் ? |
| பதில் | சரிதான். நான் பஸ்ஸிற்கு பின்னால் இருந்து பார்த்தேன். |
| கேள்வி | சம்பவத்தை நீங்கள் நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், போலீசார் கேட்டு கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கீறிர்கள் என்றால் ? |
| பதில் | சரியல்ல. |
| <u>2 வது எ.த.கு.வி</u> | |
| கேள்வி | நீங்கள் விபத்தினால் ஏற்பட்ட சத்தம் கேட்கும் போது பஸ்ஸிற்கு பின்பாக கிழக்கு புறமாக பத்து அடி தள்ளி இருந்தீர்கள் என்றால் ? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | சத்தம் கேட்ட பின்பு இரு சக்கர வாகனத்தை நிறுத்தி விட்டு நடந்து பஸ்ஸிற்கு முன்பாக வந்து பாரத்தீர்கள் என்றால் ? |
| பதில் | சரிதான் |
| கேள்வி | உங்களுக்கு புகார் கொடுத்த முருகன் தெரியாது என்றால் ? |

| | |
|---|---|
| | .3. |
| பதில் | சரிதான். |
| கேள்வி | ஆம்புலன்ஸில் போனவர்கள் யார் , யார் என்று உங்களுக்கு தெரியுமா என்றால் ? |
| பதில் | தெரியாது. |
| கேள்வி | சம்பவ இடத்திற்கும், ஆண்டிபட்டி காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் ? |
| பதில் | அரை கி.மீட்டருக்கு குறைவாக இருக்கும். |
| கேள்வி | அப்போதே போலீசார் அங்கு 5 நிமிடத்தில் வந்து விட்டார்கள் என்றால் ? |
| பதில் | சரிதான். |

மறு விசாரணை இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 04.09.2024 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

S GOPINATHAN Digitally signed by S GOPINATHAN Date: 2024.09.04 14:31:15 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
04.09.2024